[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 17

இதே உறுப்பினர் எங்களுக்கு ஏன் தண்ணீர் கொடுக்கவில்லை என்று கேட்க மாட்டாரா என்ற வினாவை அவரே எழுப்பி, அதற்கு பதில் என்ன என்பதை அவர்களே புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தண்ணிர் வீணாக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு, அவர்களும் இந்த அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(எ) அன்னப்பநாயக்கன் அணை கால்வாயில் ''துபா'' வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுப்பது குறித்து.

திரு க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கல் பட்டு மாவட்டம், அன்னப்ப நாயக்கன் குப்பத்தைச் சேர்ந்த ராமநாயக்கன் கண்டிகை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அன்னப்ப நாயக்கன் அணை கால்வாயில் ''துபா'' வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் நெல், வேர்கடலை, மிளகாய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, கேழ்வரகு போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' மாண்புமிகு வேளாண்மை, மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தை வேலு: தலைவர் அவர்களே, நடைமுறை விதிகளின்படி பொதுப்பணித்துறை நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்து (ஆறு, அணைக்கால்வாய்கள் உள்பட) நேரே தனியாரது குழாய்/வடிகால்கள் வழியே நீரை எடுத்துச் செல்வது சட்டவிரோதமாகும். இந்நிலையில் அன்னப்பநாயக்கன் அணையின் மேற்புறம் இடது கரையில் ''துபா'' வைத்து நீர்கொண்டு செல்வது முறையற்றதாகும். ஆகையால் விதிமுறைக்கு எதிராக தண்ணீர் எடுப்பது தடை செய்யப்பட்டது.

[பிற்பகல் 12-20]

திரு. க. சுப்பு: இந்தக் கால்வாய் கட்டப்படுகிற நேரத்தில் ஏற்கனவே போய்க்கொண்டிருந்த ஓடையில் இருந்து ஊர் மக்கள் துன்ரை எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். இந்தக் கால்வாயை எடுத்து அரசாங்கம் அதைக் கட்டுவதற்கான வேலைகளில் ஈடுபடும்போது தங்களுக்கும் தண்ணீர் விட வேண்டுமென்று அவர்கள் கேட்டு அரசாங்கமே குழாய் வைத்துக் கொடுத்து அவர்கள் விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் திடீரென்று ஒரு எஞ்சினியரும் அசிஸ்டென்ட் எஞ்சினியரும் வந்து அவ்வாறு தண்ணீர் எடுக்கக்கூடாது என்று கூறி குழாயை உடைத்துவிட்டு சென்று விட்டனர். தலைமைப் பொறியாளரை நானே போய்ப்பார்த்து மகஜர் தந்திருக்கிறேன். அந்த மகஜர் உங்கள் கைக்குக் கிடைத்திருக்கிறதா என்று

தெரியவில்லை. இலாகாவிலிருந்து இதை உங்களுக்குக் கொடுத்தால் அதிலே உள்ள விவரங்களை எல்லாம் நீங்கள் பார்க்கலாம். அந்த மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரிமை பறிபோயிருக்கிறது. இந்த உண்மையை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மீண்டும் அந்த விவசாய மக்கள் உரிமை பெற நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்த அரசாங்கமே முன் வந்து குழாய் வைத்துக் கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. மேலும் மகஜர் ஒன்றை இந்த அரசாங்கத்திற்கு அனுப்பியதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட மகஜர் வந்ததாகத் தெரியவில்லை. அப்படி மகஜர் வந்து அரசாங்கமே முன்வந்து குழாயை அமைத்திருந்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) விவசாயிகள் கொடுத்து வந்த கரும்பை பெரம்பலூர் சர்க்கரை ஆலை, வாங்க மறுப்பது குறித்து:

* திரு. ரெ.வி. சவுந்தரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் சர்க்கரை ஆலையில் பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள், திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வந்த கரும்பை குருங்குளம் சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் தலையீட்டினால் பெரம்பலூர் சர்க்கரை ஆலை கரும்பை வாங்க மறுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தனது 1978—69 அரவை பருவத்திற்குத் தேவையான கரும்பினைச் சென்று ஆண்டு நடவு பருவத்திலேயே 6,858 ஏக்கர் என்ற அளவில் பதிவு செய்து கொண்டது. போதுமான அளவிற்கு கரும்பு இருப்பதினால் பதிவு செய்யப்படாத கரும்பிற்கு முன்னுரிமை தந்து அரவைக்கு எடுத்துக் கொள்வது என்பது இயலாது.